[25th September 1958

(ஆ) இத்தொகை எப்போது கட்டினார்கள் ?

(இ) பாலம் கட்டும் வேலை எந்த நிலையில் இருக்கிறது ?

(ஈ) எப்போது பூர்த்தியாகும் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) Rs. 7,500.

(*b*) The villagers' contributions totalling Rs. 7,500 were remitted in a number of instalments between 7th April 1955 and 23rd April 1957.

(*c*) The work has not been sanctioned as funds under " Communications " have been exhausted. Funds from other heads are diverted and work will be sanctioned thereafter.

(*d*) No definite indication can be given in view of (*c*) above.

Sri A. VEDARATHNAM : கிராமவாசிகள் இதற்கென்று கண்ட்ரிப்யூஷன் தொகை கேட்டு நெடுநாளாக எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்., காலதாமதம் ஆகிக் கொண்டிருக்கிறது. துரிதமாகக் நடத்த அரசாங்கம் ஏதேனும் முயற்சியெடுக்குமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதிலே இந்த கம்யூனிகேஷனுக்கு என்று ஒதுக்கப்பட்டிருந்த நிதி முழுவதும் செலவாகி விட்டது. மற்ற இனங்களிலிருந்து இதற்கு ஒதுக்க மத்திய சர்க்காரின் அனுமதி வேண்டும். அனுமதியும் கிடைத்திருக்கிறது. உடனடியாக எடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்யப்படும்.

Copyists

* 542 *Q*.—**Sri T. T. DANIEL** : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have granted any house rent allowance to copyists; and

(*b*) if so, the rate of allowance?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) The Copyists in the Registration Department and those in the Judicial and Revenue Departments of the erstwhile T.C. State allotted to the Madras State on the reorganisation of States are granted house rent allowance.

(*b*) The rate of the allowance depends upon the pay actually drawn by and the place of employment of the copyists.

House rent allowance for teachers

* 543 *Q*.—**Sri A. GOVINDASAMY** : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have received any representation recently from the Madras Teachers Association regarding the grant of house rent allowance to teachers in aided schools; and

(*b*) if so, the action taken thereon?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) & (*b*) No, Sir. But, on a representation from the teachers of the Ramakrishna Mission High School, Thyagarayanagar, Madras, the Government considered the question of paying house rent allowance to teachers in aided

25th September 1958]

schools. They have decided to defer the proposal on account of the heavy commitment by way of expenditure that a grant from the State Funds towards such an allowance would involve.

* 544 *Q.*—Sri A. GOVINDASAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state with reference to question No. 132 answered on 11th November 1957, the decision taken in regard to the payment of house-rent allowance to teachers in aided educational institutions?

The Hon. Sri C. SUBRAMANIAM : On a representation from the teachers of the Ramakrishna Mission High School, Thyagarayanagar, Madras, the Government considered the question of paying house-rent allowance to teachers in aided schools. They have decided to defer the proposal on account of the heavy commitment by way of expenditure that a grant from the State Funds towards such an allowance would involve.

Sri A. GOVINDASAMY : அடுத்த வரவுசெலவுத் திட்டத்திலாவது இந்த ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுப்பதைப்பற்றி ஆலோசித்து அதற்கு நிதி ஒதுக்கப்படுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அடுத்த பட்ஜெட்டைப்பற்றி விவரங்கள் இப்போது சொல்ல முடியாது. ஒரு திருத்தத்தைச் சொல்ல விரும்புகிறேன். இதிலே, இதற்கு முன்பு ஒரு தடவை எவ்வளவு செலவாகும் என்று கேட்ட கேள்விக்கு 10 லட்ச ரூபாய் செலவாகும் என்று குறிப்பிட்டேன். இப்போது 15 லட்சத்திற்குச் செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

Sri A. GOVINDASAMY : மத்திய அரசாங்கத்தினிடமிருந்து, இந்த ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்க நிதி கோரப்ப படுமா ? அதைப்பெற்று இந்தப் பிரச்னை தீர்க்கப்படுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இது மாதிரி பலவிதமான கோரிக்கைகளை அவ்வப்போது கவனித்து ஆசிரியர்களுக்குப் பல சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதைப் போல வருஷா வருஷம் கொஞ்சம் கொஞ்சமாக இந்தக் குறைகளைப் போக்க சர்க்கார் முயற்சி செய்யும். மத்திய சர்க்காரிடம் எந்த அளவு கேட்க முடியுமோ அதுவும் கேட்டு பெறப்பட்டுத்தான் வருகிறது.

Dr. Srimathi T. S. SOUNDARAM RAMACHANDRAN : இண்டஸ்ட்ரியல் காலனிகளுக்கு கால்பாகம் மானியமாகக் கொடுத்தும் மற்றதை கடனாகக் கொடுத்தும் ஜாகை வசதி செய்து கொடுப்பதைப் போல, மத்திய சர்க்காரிடமிருந்து மான்யத்தைப் பெற்று,. ஆசியர்களுக்கு மானேஜ்மென்ட் வீடு கட்ட முன் வந்தால், ஓரளவு மான்யமாகவும், மற்றதைக் கடனாகவும் கொடுத்து உதவ சர்க்கார் முன் வருமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இந்த வீடுகள் கட்டிக் கொடுப்பதிலே முதலிடம் பெண் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதை கனம் அங்கத்தினர் வரவேற்பார்கள் என்று நினைக்கிறேன். அவர்களுக்கு முதலில் வேண்டிய வசதி செய்துகொடுத்து, பிறகு ஆசிரியர்களுக்கு இந்தத் திட்டத்தை அமுலாக்க சர்க்கார் முயற்சி செய்யும்.

Sri K. VINAYAKAM : Sir, in the state of affairs as it is to-day, only the teachers employed in the Government institutions are paid house-rent allowance and those in the private agencies are not given anything by the Government. If the private agencies come forward